## கே.எம்.சி.எச்.-ல்

# முழு உடல் பரிசோதனை சிறப்பு அம்சங்கள்

கோவை, அக்.19: நோய் பாதிப்பு வந்த பின் வருந்துவதை காட்டிலும் அதை வராமல் தவிர்க்க என்ன பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை தெரிந்து விழிப்புணர்வுடன் செயல்படுவதே நல்லது. ஒவ்வொருவரின் வாழ்க்கையின் வரமே அவர்களின் உடல் ஆரோக்கியம் தான். நம்மால் இயன்றவரை ஆரோக்கியத்தை பாதுகாக்க வேண்டும் என்கிறார் கோவை கே.எம்.சி.எச். மருத்துவமனையின் முழு உடல் பரிசோதனை பிரிவு சிறப்பு மருத்துவர் டாக்டர் ஜோசப்.



பாதுகாப்பு என்பது வருவதற்கு முன்பு தடுப்பது, வந்தபின் கட்டுப்படுத்துது என்று பல படிமங்கள் உள்ளன. சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வரும் பொழுது அவர்களின் சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்தி பிற நோய் தாக்கங்கள் வராமல் தவிர்க்க இயலும். அது தவிர பரம்பரை, வாழ்க்கை முறை காரணமாக சிலருக்கு சில பாதிப்புகள் வரும் என்று கணிக்க முடியும் அதுபோன்று இருப்பவர்களுக்கு அதற்கு தகுந்தாற்போல் ஆரம்ப பாதிப்புகள் வராமலும் தவிர்க்க முடியும்.

பொதுவாக இருதயம், ரத்த கொதிப்பு, புற்றுநோய், சர்க்கரை, சிறு நீரகம் உள்ளிட்ட பாதிப்புகள் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளவர்களுக்கும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதோடு வந்ததை கட்டுப்படுத்துவதற்கும், வருவதற்கு முன் தவிர்ப்பதற்கும் ஆலோசனை வழங்கப்படுகிறது. தற்போது 30 வயதை தாண்டும் ஒவ்வொருவருக்கும் எவ்வித நோய் தாக்கங்களும் வருவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளது.

கோவை கே.எம்.சி.எச். மருத்துவமனை முழு உடல் பரிசோதனை சிகிச்சை பிரிவின் சிறப்பு மருத்துவர் டாக்டர் ஜோசப் கூறியதாவது:

பெரும்பாலான நோய் பாதிப்புகளுக்கு உணவு பழக்கம், வாழ்க்கை நடைமுறை, பரம்பரை உள்ளிட்டவைகள் தான் காரணமாக இருக்கின்றது. வாழ்க்கை நடைமுறைகளை மாற்றிக்கொள்வதன் மூலம் பல நோய்களில் இருந்து நம்மை காத்துக்கொள்ள இயலும். மேலும் உடல் பருமன் என்பது சர்க்கரை, இருதய நோய் போன்ற பல நோய்களுக்கு அடித்தளமாக அமைகிறது.

புகைப்பிடித்தல் என்பது இருதய நோய், நுரையீரல் பாதிப்பு, புற்றுநோய் போன்று பலவற்றுக்கு அடித்தளமாக இருக்கிறது. பரிசோதனைக்கு வருபவர்களிடம் தற்போது எவ்வித பாதிப்பும் இல்லை என்று கூற முடியும். அதே சமயத்தில் நலமாக இருந்தாலும் பொதுவாக ஆண்டிற்கு ஒரு முறை அடிப்படை மருத்துவ பரிசோதனை செய்து கொள்வது அவசியம். இருதய பரிசோதனைக்கு வருபவர்களுக்கு ஆஞ்ஜியோகிராம் எடுத்து அவர்களின் இருதய ரத்த குழாய்களில் அடைப்பு உள்ளதா, இல்லையா என்பதனை துல்லியமாக கண்டுபிடிக்க முடியும். இருதய பாதிப்புகளுக்கு தகுந்தவாறு பாதுகாப்பு ஆலோசனை வழங்கப்படும்.

சிறுநீரகமும் மற்ற முக்கிய உறுப்புகளும் உடனடியாக செயல் இழப்பது கிடையாது. பாதிப்புகள் படிப்படியாக அதிகரித்து இறுதிகட்டத்தில் தான் செயல் இழக்கிறது. அப்பாதிப்புகளுக்கான அறிகுறிகள் தென்படும் பொழுதே பரிசோதித்து கொண்டால் சரி செய்து கொள்ள முடியும். அதே போன்று புற்றுநோயையும் ஆரம்பத்தில் கண்டறிந்தால் முழுமையாக குணப்படுத்த இயலும். இதற்காக கேஎம்சிஎச்–ல் முழு உடல் புற்றுநோய் ஸ்கிரீனிங் செயல்படுகிறது. நோய் முற்றிய பின்பு மருத்துவமனைக்கு வருவதே இழப்புகளுக்கு காரணம். இம்மருத்துவமனையில் அனைத்து விதமான நோய்களுக்கும் சிறப்பான சிகிச்சைகள் வழங்கப்படுவதுடன், ஆரம்ப நிலையை எளிதில் பரிசோதனை மூலம் கண்டறிய நவீன கருவிகள், ஆலோசனை மையமும் உள்ளது.

இவ்வாறு ஜோசப் கூறினார்.

கேஎம்சிஎச் மருத்துவமனையில் டாக்டர் ஜோசப் தலைமை சிறப்பு மருத்துவராக முழு உடல் பரிசோதனை (மாஸ்டர் ஹெல்த் செக்கப்) பிரிவில் உள்ளார். மேலும் விவரங்களுக்கு 9500712888, 0422-4323727 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

**மின்னஞ்சல்** mhc@kmchhospitals.com